

கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறவுள்ள ஊரக உள்ளாட்சி தேர்தல் 2016-க்கான தமிழ்நாடு அரசிதழ்களை (எண்: 209 மற்றும் 210) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் (23.09.2016) அன்று வெளியிட, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி. டி. ஹெட்சி லீமா அமலினி அவர்கள் பெற்றுக்கொண்டார்.

செ.வெ.எண்: 671 /2016 நாள்: 24.09.2016

# பத்திரிக்கைச் செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறவுள்ள ஊரக உள்ளாட்சி தேர்தல் 2016-க்கான மாவட்ட ஊராட்சி தலைவர், ஊராட்சி ஒன்றிய தலைவர், கிராம ஊராட்சி தலைவர் ஆகிய பதவிகளுக்கான இடஒதுக்கீடு தமிழ்நாடு அரசிதழ் எண்: 209 நாள் : 16.09.2016 வெளியிடப்பட்டுள்ளது. மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் ஆகிய பதவிகளுக்கான இடஒதுக்கீடு தமிழ்நாடு அரசிதழ் எண் : 210 நாள்: 16.09.2016 வெளியிடப்பட்டுள்ளது. கிராமஊராட்சிவார்டுஉறுப்பினர்களுக்கான இடஒதுக்கீடு கன்னியாகுமரி மாவட்ட அரசிதழ் சிறப்பு எண் : 3 நாள் : 16.09.2016 வெளியிடப்பட்டுள்ளது. மேற்காணும் அனைத்து அரசிதழ்களும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான், இ.ஆ.ப., அவர்களால் வெளியிட திருமதி.கெட்ஸிலீமாஅமலினி திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் பெற்றுகொண்டார்.

மேலும் மேற்காணும் இடஒதுக்கீடுகள் குறித்த விவரங்கள் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் வைக்கப்பட்டுள்ளது. எனவே 2016 ஊரக உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட விரும்புவர்கள் தாங்கள் போட்டியிடும் பதவிக்கான இட ஒதுக்கீடுகள் குறித்த விவரங்களைஅறிந்து கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

மாவட்டஆட்சியரின் நேர்முகஉதவியாளர் (தேர்தல்)
கன்னியாகுமரிமாவட்டம்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.